**O.S.No.80/2016** நாள் : 12.08.2022

**PW 1 குறுக்குவிசாரணை தொடர்ச்சி.( 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு )**

மேற்படி தாவா சொத்துக்களில் உள்ள புல எண்களில் உள்ள நடைபாதை எந்த வருடத்திலிருந்து உள்ளது என்றால் தெரியவில்லை. 1924 ஆண்டு ரீசெட்டில்மெண்ட் புல வரைபடத்தில் தாவா புல எண்களில் detailed path way உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1981 வருடத்தில் தயார் செய்யப்பட்ட புல வரைபடத்திலும் detailed path way உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. detailed path way என்பது ஒரு சொத்தில் நிரந்தரமாக இருக்ககூடிய வழி பாதையை குறிக்கும் என்றால் இல்லை. 1977 ம் வருடத்தில் தாவா பாதையில் ரோடு அமைக்கப்பட்டது என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. அன்னை நகருக்கு செல்லும் சாலை எப்பொழுது அமைக்கப்பட்டது என்றால் அது மாதிரி சாலை அமைக்கப்படவில்லை. அசல் வழக்கு எண்.200/1986 வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சாலை அமைக்கப்பட்டதாக பத்தி 4 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.148/1986 என்ற வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் தாவா சொத்தாக இந்த வழக்கு சொத்தை தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா சொத்தில் ரோடு உள்ளதாக ஒத்துகொண்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா புல எண்களில் 1982 அடி நீளம் 30 அடி அகலம் ரோடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சாலையில் பொது மக்கள் பயன்படுத்துவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றும், வாகனங்கள் பயன்படுத்தகூடாது என்று வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் யாத்திரிகர்கள் மட்டும் பயன்படுத்திகொள்ளலாம் என்று கூறியுள்ளோம். நான் வழக்குரையில் யாத்திரிகர்கள் மட்டும் பயன்படுத்தி கொள்ளலாம் என்று கூறவில்லை என்றும், முஸ்லீம் தெருவாசிகளும், பொது மக்களும் பயன்படுத்தி கொள்ளலாம் என்று கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அசல் வழக்கு எண்.148/1986, 200/1986 ஆகிய வழக்குகளை எங்கேயும் கூறவில்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம். மேற்படி ஆவணங்களை வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி இரண்டு வழக்குகளிலும் என்ன முடிவானது என்றால் எங்களுக்கு சாதகமாக உத்தரவு வந்தது. மேற்படி அசல் வழக்கு

எண்.148/1986 ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ-15, 16 ஆகும். அ.வ.எண்.200/1986 ல் தாக்கல் செய்யப்பட்ட சமாதான மனு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ-11 , 12 ஆகும். மேற்படி 2 வழக்குகளிலும் நானும், தெருவாசிகளும் சேர்ந்து சமரசம் செய்துகொண்ட ஆவணங்கள் வா.சா.ஆ- 11,12 மற்றும் 15,16 என்றால் சரிதான். அ.வ.எண்.200/1986 ல் ஏற்பட்ட ராஜினாமாவை அனுசரித்து தான் அ.வ.எண்.148/1986 ல் ராஜினாமா செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து வழியாக சாலை உள்ளது அதை வாதி பேராலயம் சார்பாக நடந்து செல்வதற்கு அனுமதி அளித்து வாகனங்களுக்கு அனுமதி இல்லை என்றும் ஒத்துக்கொண்டு அந்த ராஜினாமா செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு ராஜினாமா டிகிரி சரத்துக்களை இந்த வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளின் விபரங்களை இந்த வழக்கில் மறைக்க வேண்டிய காரணம் என்ன என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் அந்த வழக்குகளின் விபரங்களை யார் தெரிவிக்கபோகிறார் என்ற எண்ணத்தில் அவைகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.200/1986 என்பது பிரதிநிதித்துவ வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கில் வாதிகளில் 2 வாதிகளை சேர்க்காமால் சமாதான மனுவில் மற்ற வாதிகளிடம் கையொப்பம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். பிரிதிநிதித்துவ வழக்கு என்பதால் அந்த பகுதியில் உள்ள மக்களின் கருத்துக்களை கேட்டு இந்த ராஜினாமாவை தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த .பகுதி மக்களின் சார்பாக தான் வாதிகள் என்பதால் அவர்களிடம் தனியாக கருத்து கேட்கவில்லை. சட்டவிதிகளை பின்பற்றி அந்த பகுதி மக்களிடம கருத்து கேட்காமல் சில வாதிகளிடம் மட்டும் சமாதான மனு தாக்கல் செய்துள்ள ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ-11, 12 ஆவணங்கள் இந்த வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்பதால் அதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ-15, 16 ஆவணங்களும் செல்லாது என்றால் சரியல்ல. அந்த 2 வழக்குகளில் 1982 அடி நீளம் 30 அகலம் சாலையில் முஸ்லீம் தெருவாசிகளும் பழைய வழக்குகளில் நடந்து செல்வதற்கு அனுமதி அளித்துவிட்டு தற்பொழுது அதை மறுப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. முந்தைய 2 வழக்குகளிலும் தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் அளித்த உத்தரவு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவு சந்தேகத்திற்கு உரிய உத்தரவு என்றும், அது திடமான உத்தரவு இல்லை என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் பிற்ப்பித்த உத்தரவை அந்த

வருவாய் துறை தான் நிறைவேற்ற முடியும் என்றும், அதனை சிவில் நீதிமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. 1984 ல் பெற்ற உத்தரவு உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதை செயல்படுத்தியிருப்போம் என்றும், அது உண்மை இல்லை என்பதால் தான் 2016 ல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவு உண்மை இல்லை என்பதால் தான் முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் அவற்றை பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தஞ்சாவூர் மாவட்ட வருவாய் அலுவலர் அளித்த உத்தரவை 10.10.2017 ல் செயல்படுத்த முடியாது என்றும், ரத்து செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவை செயல்படுத்த வேண்டும் என்றாலும், கோட்டாட்சியர் போட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்றாலும் மாவட்ட ஆட்சியரிடம் தான் மேல்முறையீடு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 1984 ல் வரையறுக்கப்பட்ட எல்லையை தற்போது மாற்ற முடியாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் உள்ள உண்மையான சாலையை மறைத்து தவறான புல எண்களை குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய சாலை என்று எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது ஒரு கல்வெட்டு அங்கு வைக்கப்பட்டதா என்றால் இல்லை. தாவா சாலை தெற்கு வடக்காக உள்ளது என்றால் சரிதான். அந்த சாலையில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை. அந்த சாலையில் குடிநீர் இணைப்பிற்கான பைப்லைன் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனிபட்ட நபரின் பெயரில் சொத்து இருந்தாலும் அந்த சொத்து பொது மக்கள் பயன்பாட்டில் சாலையாக பயன்படுத்தும்போது அது பொதுவான சாலை என்றால் சரியல்ல. அது பொது சாலை என்பதால் தான் தெருவிளக்குகள், குடிநீர் இணைப்பு குழாய்கள் அமைத்துள்ளன என்றால் சரியல்ல. பொதுமக்கள் பிரதிநிதிகள் என்று வழக்கு தாக்கல் செய்யலாமேஒழிய பொதுமக்கள் என்று பிரதிவாதியாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. அதில் 2 முதல் 4 பிரதிவாதிகள் முஸ்லீம் தெரு பிரதிநிதித்துவ நபர்கள் என்று சேர்த்துள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள சாலையை இந்து , முஸ்லீம், கிருஸ்துவர்கள் என்ற இன பாகுபாடு இல்லாமல் அனைவரும் பொதுசாலையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. புல எண்.95/4 ல் பேரூராட் சி அமைந்துள்ள பாதாள சாக்கடை தொட்டி உள்ளது என்றால் நாங்கள் அந்த இடத்தை இணாமாக பேரூராட்சிக்கு

கொடுத்தோம். அந்த இடத்திற்கும் சேர்த்து தான் இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் இல்லை. 2 முதல் 4 பிரதிவாதிகள் எங்களிடம் திருப்பயணிகள் நலனுக்காக கழிவறை கட்டும்போது பிரச்னை செய்வதாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் சாலை அமைத்து தர வேண்டி போராட்டம் நடத்தபோவதாக துண்டுபிரசுரம் வினியோகித்தார்கள் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. பொது மக்கள் சாதி, இன பாகுபாடு இல்லாமல் பொதுவாக பயன்படுத்தி வரும் பாதையை நாங்கள் ஆக்கிரமம் செய்யவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மைகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் உரிமை விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.